

# மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேறியது

## மாநிலங்களவையில் ஆதரவு 214; எதிர்ப்பு 0

மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேறியதைத் தொடர்ந்து, உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்த பிரதமர் மோடி.

## வழிநடத்திய பெண் எம்.பி.க்கள்

## 'பொன்னான தருணம்'

## நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

# காவிரி ஆணையத்தின் உத்தரவில் தலையிட உச்சநீதிமன்றம் மறுப்பு

காவிரி ஆணையத்தின் உத்தரவில் தலையிட விரும்பவில்லை என உச்சநீதிமன்றம் தெரிவித்ததையடுத்து, தமிழகத்துக்கு 15 நாள்களுக்கு 5,000 கனஅடி நீரைத் திறக்க வேண்டும் என்ற ஆணையத்தின் செப்.18–ஆம் தேதி உத்தரவை செயல்படுத்த வேண்டிய கட்டாயம் கர்நாடகத்துக்கு ஏற்பட்டுள்ளது.

# 'வந்தே பாரத்' ரயில் சோதனை ஓட்டம் வெற்றி

## சென்னையிலிருந்து 8 மணி நேரத்தில் நெல்லை வந்தது

**திருநெல்வேலி / சென்னை, செப். 21:** திருநெல்வேலி- சென்னை இடையே இயக்கப்படவுள்ள வந்தே பாரத் விரைவு ரயிலின் சோதனை ஓட்டம் வியாழக்கிழமை வெற்றிகரமாக நிறைவடைந்தது. குறித்த நேரத்தில் இலக்கை அடைந்ததால் ரயில்வே பணியாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

திருநெல்வேலி- சென்னை இடையே வந்தே பாரத் விரைவு ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் ஞாயிற்றுக்கிழமை (செப். 24) காலையில் தொடங்கி வைக்கவுள்ள நிலையில், சென்னையில் இருந்து சோதனை ஓட்டமாக திருநெல்வேலிக்கு வந்தே பாரத் ரயில் வியாழக்கிழமை வந்து சேர்ந்தது.

தமிழகத்தில் சென்னை-மைசூரு, சென்னை- கோவை இடையே வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வரும் நிலையில், திருநெல்வேலி-சென்னை இடையே ஞாயிற்றுக்கிழமை (செப். 24) முதல் வந்தே பாரத் விரைவு ரயில் சேவை தொடங்கவுள்ளது.

இதையொட்டி, வந்தே பாரத் விரைவு ரயில் சோதனை ஓட்டமாக சென்னையிலிருந்து வியாழக்கிழமை காலை 7 மணிக்கு புறப்பட்டு பிற்பகல் 3.10 மணிக்கு திருநெல்வேலியை வந்தடைந்தது.

இதுதொடர்பாக ரயில் பெட்டிகள் - வேகன்கள் தலைமைப் பொறியாளர் முகுந்த் செய்தியாளர்களிடம் கூறியதாவது: திருநெல்வேலி-சென்னை இடையே இயக்கப்படவுள்ள வந்தே பாரத் விரைவு ரயிலின் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்தது. இந்த ரயில் சேவையின் தொடக்க விழா செப். 24ஆம் தேதி காலையில் நடைபெறுகிறது.

மணிக்கு 110 கி.மீ. வேகத்தில் இயக்கப்படும் இந்த ரயில், சென்னை- திருநெல்வேலி இடையிலான 650 கி.மீ. தொலைவை 7.50 மணி நேரத்தில் கடக்கும். இன்னும், இந்த ரயிலின் வேகத்தை 130 கி.மீ. வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இந்த ரயிலில் 52 பேர் வரை பயணிக்கக்கூடிய ஒரு 'எக்ஸிகியூட்டிவ்' பெட்டி உள்ளிட்ட 8 பெட்டிகள் உள்ளன. மற்ற 7 பெட்டிகளிலும் தலா 76 பேர் பயணிக்கலாம். ரயில் என்ஜின் உள்ள பெட்டியிலும் 46 பேர் வரை பயணிக்க முடியும். தற்போதைய நிலையில் 540 பேர் வரை இந்த ரயிலில் பயணிக்கலாம்.

இது, விருதுநகர், மதுரை , திண்டுக்கல், திருச்சி, விழுப்புரம் ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும். ஞாயிற்றுக்கிழமை தொடக்க விழா நடைபெற்றாலும், திங்கள்கிழமையில் இருந்துதான் முறைப்படி இயக்கப்படுகிறது என்றார்.



திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையத்தை வியாழக்கிழமை வந்தடைந்த வந்தே பாரத் ரயில்.

**வியாழக்கிழமை சேவை இல்லை:** திருநெல்வேலியிலிருந்து காலை 6 மணிக்கு புறப்பட்டு பிற்பகல் 1.50 மணிக்கு சென்னையை சென்றடையும். மறு மார்க்கத்தில் சென்னையிலிருந்து பிற்பகல் 2.50 மணிக்கு புறப்பட்டு இரவு 10.40 மணிக்கு திருநெல்வேலியை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரயிலுக்கான கட்டணம் உள்ளிட்ட விவரங்கள் இது வரை அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

வாரத்தில் 6 நாள்கள் இந்த ரயில் இயங்கும்; வியாழக்கிழமை மட்டும் இயக்கப்படாது என ரயில்வே துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

**இன்றும் சோதனை ஓட்டம்:** பாரத் விரைவு ரயிலின் சோதனை ஓட்டம் மீண்டும் வெள்ளிக்கிழமை (செப்.22) நடைபெறுகிறது. திருநெல்வேலியில் காலை 6 மணிக்கு புறப்படும் இந்த ரயில் பிற்பகல் 2 மணிக்கு சென்னையை சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 48 மருந்துகள் தரமற்றவை: மத்திய கட்டுப்பாட்டு வாரியம் அறிவிப்பு

**சென்னை, செப். 21:** மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விற்பனையகங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 48 மருந்துகள் தரமற்றவையாக இருந்தது கண்டறியப்பட்டதாக மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

அவற்றில் பெரும்பாலானவை ஹிமாசல பிரதேசம், குஜராத், உத்தரகண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் தயாரிக்கப்பட்டவை.

நாட்டில் விற்பனை செய்யப்படும் அனைத்து வகையான மருந்து - மாத்திரைகளும் மத்திய மற்றும் மாநில மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியங்கள் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன. அதேபோன்று போலி மருந்துகளும் கண்டறியப்பட்டு அதன்பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த மாதத்தில் மட்டும் 1,166 மருந்துகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அவற்றில் கிருமித் தொற்று, இரைப்பை அழற்சி, காய்ச்சல், சளி, பாக்டீரியா தொற்று உள்ளிட்ட பாதிப்புகளுக்குப் பயன்படுத்தப்படும் 48 மருந்துகள் தரமற்றவையாக இருந்தது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, அதன் விவரங்கள் மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியத்தின் cdsco.gov.in என்ற இணையதளப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மருந்து கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தேசிய மருத்துவ ஆணையத்துக்கு சர்வதேச அங்கீகாரம்

**புது தில்லி, செப். 21:** இந்தியாவில் மருத்துவக் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் தேசிய மருத்துவ ஆணையத்துக்கு (என்எம்சி) மருத்துவக் கல்விக்கான உலக கூட்டமைப்பின் (டபிள்யு.எஃப்.எம்.இ) அங்கீகாரம் கிடைத்துள்ளது.

'இந்த அங்கீகாரம் மூலமாக, இந்தியாவில் இளநிலை மருத்துவப் படிப்பை முடிக்கும் மாணவர்கள், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் தடையின்றி பணிபுரியவும், மருத்துவப் பட்ட மேற்படிப்பை மேற்கொள்ளவும் முடியும்' என்று என்எம்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

என்எம்சி-க்கு மருத்துவக் கல்விக்கான உலக கூட்டமைப்பின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான முறையான அறிவிப்பு கடிதமும், அங்கீகார சான்றிதழும் என்எம்சி-யிடம் விரைவில் வழங்கப்படவிருக்கிறது.

இந்த அங்கீகாரம் மூலமாக, என்எம்சி-யின் கீழ் செயல்படும் நாடு முழுவதுமுள்ள 706 மருத்துவக் கல்லூரிகளும் மருத்துவக் கல்விக்கான உலக கூட்டமைப்பின் அங்கீகாரத்துக்கு கீழ் வந்துவிடும்.

அதுபோல, அடுத்த 10 ஆண்டுகளில் புதிதாக தொடங்கப்படும் மருத்துவக் கல்லூரிகளும் தானாக உலக கூட்டமைப்பின் அங்கீகாரத்தின் கீழ் வந்துவிடும்.

இந்த அங்கீகாரம் மூலம், இந்தியாவில் வழங்கப்படும் மருத்துவக் கல்வியின் தரம் மேம்படும் என்பதோடு, இந்தியாவில் இளநிலை மருத்துவப் படிப்பை முடிக்கும் மாணவர்கள் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் மருத்துவராகப் பணியாற்றவும், மருத்துவப் பட்ட மேற்படிப்பை மேற்கொள்ளவும் முடியும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து என்எம்சி-யின் நெறிமுறைகள் மற்றும் மருத்துவப் பதிவு வாரிய உறுப்பினர் மருத்துவர் யோகேந்தர் மாலிக் கூறுகையில், 'இந்த அங்கீகாரம், இந்திய மருத்துவ மாணவர்கள் உலகெங்கும் பணியாற்றும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் என்பதோடு, சர்வதேச மாணவர்கள் தரமான மருத்துவக் கல்விக்கு விருப்பத் தேர்வு செய்யும் இடமாக இந்தியாவை மாற்றும்' என்றார்.

உலக அளவில் தரமான மருத்துவக் கல்வியை விரிவுபடுத்தும் பணியை மேற்கொண்டுவரும் சர்வதேச அமைப்பு டபிள்யுஎஃப்எம்இ என்பது குறிப்பிடத்தக்கது.

EVA STALIN IAS ACADEMY

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# வாக்காளர் சேர்ப்பு, புதுப்பிப்புக்கு ஆதார் கட்டாயம் அல்ல

## இந்திய தேர்தல் ஆணையம்

**புது தில்லி, செப்.21:** வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பது விருப்பத்தின் அடிப்படையிலேயே தவிர கட்டாயம் அல்ல. இதைத் தெளிவுபடுத்தும் விதமாகப் புதிய வாக்காளர் சேர்ப்பு, புதுப்பிப்பு ஆகியவற்றுக்கான படிவங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்படும் என உச்ச நீதிமன்றத்தில் இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள போலி வாக்காளர்களை நீக்கும் விதமாக வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்க தேர்தல் ஆணையம் முடிவெடுத்ததையடுத்து, வாக்காளர் பதிவு (திருத்தம்) விதிகள், 2022 வெளியிடப்பட்டது.




இதில் புதிதாகச் சேர்க்கப்பட்ட விதி 26பி-இன்படி, வாக்காளர் பட்டியலில் பெயரைக் கொண்டுள்ள ஒவ்வொரு நபரும், படிவம் 6பி-ஐ நிரப்பும் வகையில் வாக்காளர் பதிவு அதிகாரியிடம் தனது ஆதார் எண்ணைத் தெரிவிக்கலாம்.

இதைத் தொடர்ந்து, வாக்காளராகத் தொடர்வதற்கு விதி 26பி-இன்கீழ் ஆதார் இணைப்பு கட்டாயம் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் படிவத்தில் மாற்றங்கள் செய்யக்கோரி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடுமாறு ஜி.நிரஞ்சன் என்பவர் உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், இது குறித்துப் பதிலளிக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு கடந்த பிப்ரவரி 27-இல் நோட்டீஸ் அனுப்பியது.

இந்நிலையில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையில் நீதிபதிகள் ஜெ.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு முன்பாக இந்த மனு வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, விதி 26பி-இன்கீழ் ஆதார் எண் இணைப்பு கட்டாயம் அல்ல. எனவே, இந்த நோக்கத்துக்காக கொண்டு வரப்பட்ட படிவங்களில் இதைத் தெளிவுபடுத்தும் விதமாக மாற்றங்கள் கொண்டுவரப்படும்.

சுமார் 66 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள், தங்கள் ஆதார் எண்ணை வாக்காளர் அடையாள அட்டையுடன் ஏற்கெனவே இணைத்துள்ளனர் என தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட உச்சநீதிமன்றம், இந்தப் பொதுநல மனுவைத் தள்ளுபடி செய்தது.

# தற்சார்பு இந்தியா திட்டத்தில் இணைகிறது போயிங் நிறுவனம்



**புது தில்லி, செப்.21:** அமெரிக்காவின் மிகப் பெரிய விமான தயாரிப்பு நிறுவனமான போயிங், பி-8ஐ என்ற கடற்சார் கண்காணிப்பு விமானத்தின் தொழில்நுட்பம், உதிரி பாகங்களை இந்தியாவில் தயாரிக்க திட்டமிட்டுள்ளது.

இந்திய கடற்படையில் அதிநவீன பி-8ஐ கண்காணிப்பு விமானங்கள் 12 உள்ளன. மேலும், 6 விமானங்களை வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

தற்சார்பு இந்தியா திட்டத்தின் மூலம் இந்தியாவிலேயே இந்த விமானங்களின் உதிரி பாகங்கள் தயாரிக்க போயிங் திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய போயிங் நிறுவனத்தின் இந்திய தலைவர் சாலில் குப்தே, 'இந்திய கடற்படைக்கு கூடுதல் பி-8ஐ கண்காணிப்பு விமானங்கள் தயாரிக்கப்படும்போது, அதன் பொறியியல் தொழில்நுட்பம் உள்பட பல்வேறு பாகங்களை இந்தியாவிலே தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்தியாவும், சர்வதேச வாடிக்கையாளர்களும் பயனடைவார்கள். இது தற்சார்பு இந்தியா திட்டத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்ல போயிங் நிறுவனம் அளிக்கும் ஆதரவாகும்' என்றார்.

2013-ஆம் ஆண்டு முதல் இந்திய கடற்படையில் போயிங் நிறுவனத்தின் பி-8ஐ கண்காணிப்பு விமானம் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. சுமார் 40 ஆயிரம் பயண நேரத்தைக் கடந்து அந்த விமானம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.